# රාජ්‍ය පරිපාලන සහ ස්වදේශ කටයුතු අමාත්‍යාංශය

# பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு

# Ministry of Public Administration & Home Affairs

## දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කෑගල්ල

## மாவட்ட செயலகம் - கேகாலை

## District Secretariat – Kegalle

වියදම් ශීර්ෂය / செலவினத் தலைப்பு / Head No - **279**

# කාර්යසාධන වාර්තාව සහ ගිණුම්

செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்

# Performance Report & Accounts

# 2014



| இலக்கம் | விடயம் | உப விடயம் | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 1 | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரின் செய்தி | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரின் செய்தி | 03 |
| 2 | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாரின் செய்தி | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாரின் செய்தி | 04 |
| 3. | மாவட்ட செயலாளரின் செய்தி | மாவட்ட செயலாளரின் செய்தி | 05 |
| | | தொலைநோக்கும் செயற்பணியும் | 07 |
| | | எமது சேவைகள் | 08 |
| | | நோக்கங்கள்,செயல்கள் மற்றும் செயன்முறைகள் | 09-10 |
| 4 | மாவட்ட அறிமுகம் | மாவட்டம் பற்றிய அறிமுகம் | 11 |
| | | மாவட்ட வரைபடம் | 12 |
| | | வரலாற்று முக்கியத்துவம் | 13 |
| | | இயற்கை வளங்கள் | 14 |
| | | பொதுமக்களின் வாழ்க்கைத் தொழில் முறை மற்றும் பிரதான வர்த்தக மற்றும் | 14 |
| | | பொருளாதார நடவடிக்கைகள் | 14 |
| | | நீர்ப்பாசன முறை | 14 |
| | | மழைவீழ்ச்சி | 14 |
| | | சனத்தொகைத் தகவல்கள் | 14 |
| | | மாவட்டம் பற்றிய எண்ணிக்கை ரீதியான தகவல்கள் | 16 |
| | | அமைப்பு வரைபடம் | 17 |
| | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 18 |
| 5 | செயலாற்றுகை | பொது நிருவாக நடவடிக்கைகள் | |
| | | 2014 செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 19 |
| | | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் | 20 |
| | | வறுமானம் திரட்டுதல் | 21-22 |
| | | மணித வள அபிவிருத்தி | 23 |
| | | தேர்தல் நடவடிக்கைகள் | 24 |
| | | ஊடக மற்றும் செய்தி நடவடிக்கைகள் | 25 |
| | | இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் | 25-27 |
| | | ஆட்கள் மற்றும் காணிப் பதிவு நடவடிக்கைகள் | 28 |
| | | சான்றிதழ்கள் மற்றும் அறிக்கைகள் | 29 |
| | | அனுமதிப்பத்திரங்களை வழுங்குதல் | 30 |
| | | பதிவு செய்தல் | 31 |
| | | மோட்டார போக்குவரத்து | 32 |
| | | அளவீட்டு மற்றும் நியம சேவைகள் | 33 |
| | | புள்ளிவிபரவியல் | 34 |
| | | சமூக சேவை கலாச்சார நடவடிக்கைகள் | |
| | | கலாச்சார மற்றும் மத விவகாரங்கள் | 35 |
| | | சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சிகள் | 36 |
| | | மாவட்ட விளையாட்டு நடவடிக்கைகள் | 37 |
| | | மக்கள் உதவிகள் மற்றும் ஓய்வூதியம் | 38 |
| | | சமூர்த்தி நிவாரணங்கள் | 39 |
| | | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | கமநெகும,பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சிகள்,திவிநெகும மற்றும் சபரகமுவ அருனாலோக நிகழ்ச்சி | 40-42 |
| | | மாகாண சபை முதலீடுகள் | |
| | | சமூர்த்தி செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 43-44 |
| | | அமைச்சுக்கள் மற்றும் ஏனைய திணைக்கள நிதி | 45.47 |
| 6 | வருடாந்தக் கணக்கு | டி.ஜீ.எஸ்.ஏ 2 | 48 |
| | | டி.ஜீ.எஸ்.ஏ 3 | 49 |
| | | டி..ஜீ.எஸ்.ஏ 4 | 50-51 |
| | | டி.ஜீ.எஸ்.ஏ 5 | 52-53 |
| | | அரச அலுவலர்களின் முற்பண 'பி' கணக்குத் தகவல்கள் | 54-55 |
| | | பொதுவைப்புக் கண்க்கு | 56 |

## மனித நேயமிகு அரச சேவையின் முன்னோடிகளாவோம்……….



நல்லாட்சி எண்ணக்கருவினை மையமாகக் கொண்டு ஒழுக்கம மிக்கதொரு சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்படும் இக்காலகட்டமானது இலங்கை வாழ் மக்களிற்கு கிடைத்த ஒரு அரிய வரப்பிரசாதமாகும். இந்நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக, சிவில் நிருவாகத்தில் சாதகமான மறுசீரமைப்புக்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுத்து அவற்றை 2015ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்யவேண்டியது எமது முக்கியமான தேவைப்பாடாகக் காணப்படுகிறது.

நல்லாட்சியானது எண்ணக்கருக்களைக் கொண்டு அரசாங்கம் முன்னேடுக்கின்ற திட்டமிடல்கள் மற்றும் தீர்மானமெடுத்தல் செயற்பாடுகளில், அரச ஊழியர்களை பங்கேற்பவர்களாக மாற்றுதல், மற்றும் மாவட்டச் செயலாளர்கள் மூலமாக வெளிப்படைத்தன்மையான விதத்தில் பொதுமக்களுக்குப் பொறுப்புக் கூறுதல் என்பன இறையாண்மையின் பிரதான கூறுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

அரசாங்கத் துறையிலுள்ள முக்கியமான அமைச்சுகளுள் ஒன்றான உள்நாட்டலுவல்கள் அமைச்சானது புதிய அரசாங்கத்தினது 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ள அரசியலமைப்புத் திருத்தங்களை வகுப்பதிலும் பிரதேச நிர்வாகத்தில் வினைத்திறன் வாய்ந்ததும் உற்பத்தித் திறன் வாய்ந்ததுமான திட்டங்களை வகுப்பதிலும் பாரிய பங்கை ஆற்றுகின்றது.

நாட்டினது நிதிக்கொள்கைகளைப் பின்பற்றி பொதுமக்களது வரிப்பணம் எவ்வாறு செலவு செய்யப்படுகிறது என்பதை வெளிக்காட்டத்தக்க வகையிலான செயற்திறன் மதிப்பீடொன்றை 21 ஆம் நூற்றாண்டிற்கு பொருத்தமான வகையில் நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்தல் மிகப் பொருத்தமானதாக அமையும். பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தகைய அறிக்கைகளைத் தயாரித்தல் என்பது, அரசு பொதுமக்கள் மட்டில் கொண்டுள்ள பொறுப்புக் கூறலையும், வினைத்திறனையும், உற்பத்தித் திறனையும், வெளிப்படைத் தன்மையையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

அரசாங்க சேவையின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றி, என்னுடன் இணைந்து மக்களிற்கு சிநேகபூர்வமான சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற அமைச்சின் செயலாளர் மற்றும் மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து பணியாட் தொகுதியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், 2015 ஆண்டிற்கான இலக்குகளை வெற்றி கொள்வதற்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கின்றேன்.

எம்.ஜோசப் மைக்கல் பெரேரா(பா.உ),
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

<u>அரச சேவையின் நல்லாட்சியை குறிக்கோளாகக் கொண்ட எதிர்காலத்தை நோக்கி…</u>



இந் நாட்டின் உன்னதமானதும் விசேடமானதுமான அமைச்சாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இனங்காணப்பட்டுள்ளது. நாடுபூராகவும் முறைசார் நிர்வாக கட்டமைப்பையும் விரிவாக்க வலையமைப்பையும் தன்னகத்தே கொண்டுள்ள இவ்வமைச்சு மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கு பரந்துபட்ட பங்களிப்பினை நல்கி வருகின்றது. அதுமட்டுமன்றி, அபிவிருத்தியின் பலாபலன்களை சமூகத்தின் அடிமட்டம் வரை கொண்டு செல்வதற்கும் உறுதுணை புரிந்து வருகின்றது.

2014 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் உள்ளடங்கிய, 'வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்கு அறிக்கைகளுக்கு' ஆசிச் செய்தியொன்றை வழங்கக் கிடைத்தமையை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

கடந்த ஆண்டு பூராகவும் அரசதுறைப் பணிகளை ஒழுங்கமைப்பதில் மாவட்டச் செயலகங்கள் முனைப்புடன் செயற்பட்டன. அது தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்ட அளப்பரிய சேவைகளை நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற மாவட்டச் செயலகங்களும், பிரதேச செயலகங்களும் பரந்துபட்ட மக்கள் சேவைக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றன. 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றவாறு மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்து சிநேகபூர்வமான சேவைகளை வழங்கும் பொருட்டு, மாவட்டச் செயலகங்களினால் நவீன தகவல் தொழிநுட்பங்கள் கையாளப்படுகின்றன.

இதுவரை காலமும் நாம் பெற்ற அனுபவப் பாடங்களை முதன்மையாகக் கொண்டு, பொதுமக்களிற்கு வினைத்திறன் வாய்ந்த அரசசேவையை வழங்கும் பொருட்டு 2015ஆம் ஆண்டில் புதிதாக "உள்நாட்டலுவல்கள் அமைச்சு" தாபிக்கப்பட்டது. நாட்டின் நல்லாட்சிக் கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக எமது அமைச்சின் வழியாக உரிய பங்களிப்பினை நல்குவோம். எனவே உன்னதமான அரச சேவையினை வழங்கத்தக்க எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடுவோம்!

எஸ்.டீ.ஏ.பீ.பொரலஸ்ஸ,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

## மாவட்ட செயலாளரின் செய்தி.....



மாவட்ட மற்றும் பிரதேச நிருவாகத்தின் பிரதான இடமாக கருதப்படுகின்ற மாவட்ட செயலகம் மாவட்ட அபிவிருத்திச் செயன்முறையில் பாரியதொரு கடமை மற்றும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள அரச நிறுவனம் எனக் குறிப்பிட விரும்புகின்றேன். அதன் பிரகாரம் கேகாலை நிருவாக மாவட்டத்தினுல் பிரதேச அபிவிருத்தி நோக்கங்களை சிறப்பான முறையில் அடைந்துகொள்வதற்கு பங்களிப்பை வழங்குவதன் மூலம் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் பிரதேச பொதுமக்களின் சமூக,பொருளாதார,பௌதீக,கல்வி கலாச்சார மற்றும் தகவல் தொழில்நுட்பத்தினை இயன்றவரை மற்றும் தரத்தினை மேம்படுத்த்துவதினூடாக பொதுமக்களின் நலன்புரி மற்றும் பிரதேச அபிவிருத்தியின் வழிகளைத் திறந்து கேகாலை மாவட்ட பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த இயலுமாக அமைந்தது நாங்கள் அடைந்த ஒரு வெற்றியென குறிப்பிடுகின்றேன்.

குறிப்பாக இலங்கையினுல் மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் சமநிலையான தேசீய அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக முயற்சிக்கின்ற இவ்வாரான ஒரு சந்தர்ப்பத்தில் இத்தேசிய பணியில் பங்குதார்ர் ஆவதற்கு எமது மாவட்ட செயலகத்திற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட நிருவாக முறையொன்றினுல் சீரான மணித வள முகாமைத்துவத்தினூடாக தரமான, திரனான மற்றும் உற்பத்தித் திறன் மிக்க மக்கள் சேவை யொன்றினை வழங்குவதற்கும் 2014 ஆம் வருடத்தில் மாவட்ட செயலகத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்தகொள்வதற்காகவும் அரசியல் தலைமைத்துவத்தின் ஒத்துழைப்பும் பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உற்பட ஏனைய வரிசை அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கும் இம்மாவட்ட பிரதேச செயலாளர்கள் உற்பட அனைத்து பதவியனியினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எச்.எம்.காமிணி செனவிரத்தின,
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,
கேகாலை மற்றும் உள்நாட்டலுவல்கள்
அமைச்சின் மேலதிக செயலாளர்

மாவட்ட நிருவாகம்

# <u>தொலை நோக்கு</u>

**சமாதானமான , சகவாழ்வுடன் கூடிய மலர்ந்த சமூகத்தைக் கொண்டதொரு செழிப்பான மாவட்டம்......**

## <u>செயற் பணி</u>

**மாவட்டத்தினுல்**

**நிரந்தரமான அபிவிருத்தி நடவடிக்கையை**

**உறுதி செய்வதற்காக**

**மக்கள் தேவைகளை திறனுடன்**

**நேர்மையாக, நம்பிக்கையுடன்**

**சிநேகிதமாக நிறைவேற்றுவதற்காக**

**வளங்களையும், நிறுவனங்களையும்**

**உற்பத்தித் திறனுடன் ஒருங்கினைத்தல்**

**எங்கள் செயற்பணியாகும்.**

## எமது சேவைகள்

- அரசின் மாவட்ட முகவர் நிறுவனமாக செயற்படுதல்
- அரச திணைக்களங்கள் நிறுவனங்களை ஒருங்கினைத்தல்
- மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தினையும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவையும் செயற்படுத்தல்.
- அபிவிருத்தி நிருவாக செயற்பாடுகள் சம்பந்தமான ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்தலும் நிதிக்கட்டுப்பாடும்
- கேகாலை மாவட்ட தேர்தல் இடாப்புக்களைப் பேனுதலும் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களை வழங்குதலும்
- அரசினால் பிரகடனப்படுத்தப்படுகின்ற தேர்தல்களை நடாத்துதல்
- தேசீய மற்றும் மாவட்ட ரீதியான விழாக்களை ஏற்பாடு செய்தல்
- மாவட்ட விலை நிர்ணயம், இடர் மற்றும் நலன்புரி,பாதுகாப்பு,வனவளம்,சூழல்,வீடமைப்பு நிர்மானம்,சிறுவர் பராமரிப்பு, காணிச் சீர்திருத்தம் மற்றும் விவசாய அபிவிருத்தி சம்பந்தப்பட்ட குழுக்களை செயற்படுத்தல்.
- சமூர்த்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் சம்பந்நப்பட்ட நடவடிக்கைகளை பிரதேச செயலகங்களுடன் ஒருங்கினைத்தல்
- சிறு அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்கள்
- அளவீட்டுக் கூறுகளை குறித்த நியமங்களின் கீழ் பேனுதலை அத்தாட்சிப்படுத்தல்
- காணி உறுதிகளைப் பதிவு செய்தலும் பிறப்பு.இறப்பு மற்றும் விவாகப் பதிவு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும்
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்துதல்.
- சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும், மோட்டார் வாகண சட்டங்களுடன் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளை செயற்படுத்தலும்.
- ஓய்வூதிய நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைத்தல்
- தொழில் வழிகாட்டல் நடவடிக்கைகள்
- உற்பத்தித் திறன் விருத்தி சம்பந்தமான அறிவூட்டல்கள்
- மாவட்டத்தின் பல்வேறுபட்ட விடயங்களுடன் சம்பந்தப்பட்ட புள்ளிவிபரங்களை நாளதுவரைப் படுத்திப் பேனுதல்
- துப்பாக்கி,வெடிமருந்து மற்றும் மரம் வெட்டுதல் சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திர நடவடிக்கைகள்
- மாவட்ட மற்றும் பிரதேச செயலக அலுவலர்களின் தாபண நடவடிக்கைகள்.

## அரசாங்க அதிபர் / மாவட்ட செயலகத்தின் நோக்கங்கள்

1. நம்பிக்கையுடனான,பாகுபாடற்ற அரச நிருவாகமொன்றினை உறுதி செய்வதற்காக பங்களிப்புச் செய்தல்.

11. குறித்தொதுக்கப்பட்டுள்ள ,அதிகாரங்கள் மற்றும் வளங்களை உற்பத்தித்திறன் மிக்கதாக உபயோகித்து மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுதல்.

## அரசாங்க அதிபர் / மாவட்ட செயலகத்தின் செயற்பாடுகள்

1. நியதிச்சட்ட சட்டங்களின் மூலம் குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும்,பொறுப்புக்களையும் நிறைவேற்றுதல்.

11. அரசின் பிரதான அபிவிருத்தித் திட்டங்களையும் அபிவிருத்திச் செயற்திட்டங்களையும் ( சமூர்த்தி மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ) அரசின் கட்டளைகள்,அறிவுருத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு ஏற்றவாரு நடைமுறைப்படுத்துவதை அத்தாட்சிப்படுத்தல்

111. மாவட்டத்தின் அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக மக்களின் நலனுக்காக செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகளை சீராகச் செயற்படுத்துவதற்குத் தேவையான கூட்டினைப்பு, ஒருங்கினைப்பு மற்றும் வழிகாட்டல்கள்.

iv. அரசின் மாவட்ட முகவராக செயற்படுதல்.

v. இயற்கை மற்றும் ஏனைய பேரழிவுகள், அனர்த்தங்கள் மாவட்டத்தினுல் ஏற்படும்போது நேரடியாக பங்களிப்பு செய்தல்

## அரசாங்க அதிபர் / மாவட்ட செயலகத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்கான செயன்முறைகள்

1. நிருவாகம்

1. அரசாங்க அதிபர் / மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கலுக்கான அலுவலர்களை நியமித்தலும் ஆளனிக்கோவை நடவடிக்கைகளும்.

11. மணித வள அபிவிருத்தி - மேற்பார்வை,பயிற்சி,மற்றும் அறிவுருத்தல்கள் வழங்குதல்.

2. பொருளாதார அபிவிருத்தி

1. மாவட்ட ஒருங்கினைப்புக் குழுவை அமைத்து செயற்படுத்தல்

11. மாவட்ட ஒருங்கினைப்புக் குழுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்

111. மாவட்ட அபிவிருத்திக் குழுவை அமைத்து செயற்படுத்தல்.

1V. மாவட்ட அபிவிருத்திக் குழுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்.

V. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்

அ). திட்டமிடல் ஆ). நடைமுறைப்படுத்தல் இ). மதிப்பீடு செய்தல் ஈ ). மீள் மதிப்பீடு

Vi. சமூர்த்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

அ). திட்டமிடல் ஆ). நடைமுறைப்படுத்தல் இ). மதிப்பீடு செய்தல் ஈ ). மீள் மதிப்பீடு

3. நிதி முகாமைத்துவம்

1. நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தலும்,பேனுதலும்,நிருவகித்தலும் கணக்கு மற்றும் அறிக்கைகளைப் பேனுதலும்
11. செலவுகளை மதிப்பீடு செய்தலும்,செழுத்துதலும்,கணக்கு மற்றும் அறிக்கைகளைப் பேனுதலும்.
111. வறுமானங்களை மதிப்பீடு செய்தலும், அறவீடு செய்தலும் கணக்கு மற்றும் அறிக்கைகளைப் பேனுதலும்.
iv. ஏற்பாடுகளை ஒதுக்குதல்,முற்பணங்களை விடுவித்தல் மற்றும் அது சம்பந்தமான கணக்குகளைப் பேனுதலும் அறிக்கை சமர்ப்பித்தலும்.

4. சமூக அபிவிருத்தி

1. கலாச்சார நிகழ்ச்சித்திட்டம்
   அ). திட்டமிடல் ஆ). நடைமுறைப்படுத்தல் இ). மதிப்பீடு செய்தல் ஈ). மீள் மதிப்பீடு
11. சூழல் நிகழ்ச்சித்திட்டம்
   அ). திட்டமிடல் ஆ). நடைமுறைப்படுத்தல் இ). மதிப்பீடு செய்தல் ஈ). மீள் மதிப்பீடு

5. சமூக சேவை

1. சமூர்த்தி நிவாரணம் பெறுவோர்களைத் தேர்ந்தெடுத்தல், நிவாரனம் வழங்குதல்,கணக்குகளையும் அறிக்கைகளையும் பேனுதல்.
11. மக்கள் உதவிகள்,ஏனைய உதவிகள் பெறுவோர்களைத் தேர்ந்தெடுத்தல், நிவாரனம் வழங்குதல்,கணக்குகளையும் அறிக்கைகளையும் பேனுதல்.
111. ஓய்வூதியத்தை ஒழுங்கமைத்தல்,செழுத்துதல்,கணக்குகளையும' அறிக்கைகளையும் பேனுதல்.

6. நியதிச்சட்ட விடயங்கள்

1. அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், அறிக்கைகளைப் பேனுதல்
11. அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குதல், அறிக்கைகளைப் பேனுதல்.
111. பதிவு செய்தல், அறிக்கைகளைப் பேனுதல்.

7. ஏனைய கடமைகள்

1. தேர்தல்களை நடாத்துதல்
2. ஏனைய திணைக்களங்களின் கடமைகள்.

| | | |
|---|---|---|
| i. | விவசாயம- | நியதிச்சட்ட மற்றும் தாபண அதிகாரங்கள் மற்றும் கடமைகளை செயற்படுத்துதல், அறிக்கைகளைப் பேனுதல் மற்றும் ஒருங்கினைத்தல் |
| ii. | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் - | “ |
| iii. | மோட்டார் வாகணப் போக்குவரத்து - | “ |
| iv. | குடிவரவு குடியகழ்வு - | “ |
| v. | பதிவாளர் நாயகம் - | “ |
| vi. | காணி ஆனையாளர் - | “ |
| vii. | கள அளவில் அளவில் அமைச்சு மட்டத்தில் செயற்படுகின்ற பல்வேறுபட்ட விடயங்கள் | “ |

## 3. மாவட்டம் பற்றிய அறிமுகம்

சபரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள கேகாலை மாவட்டம் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசத்திற்கும் தென்மேற்கு தரைப்பகுதிக்குமிடையில் அமைந்துள்ள எழில் மிகு சூழல் கொண்டதொரு நிலப்பிரதேசமாகும்."ருஹுனு,மாயா,பிஹிடி"எனும் திறீ சிங்களத்தில் மாயா நாட்டிற்கு உரித்தான ஒரு பிரதேசமாகும். நிருவாக ரீதியாக மாவட்டம் பிரதேச செயலகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகப் பிரிவு மற்றும் அதற்குரித்தான கிராம அலுவலர் பிரிவு பற்றிய விபரம்

| | பிரதேச செயலகப் பிரிவு | கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கேகாலை | 61 |
| 2. | கலிகமுவ | 51 |
| 3. | வரகாபொல | 78 |
| 4. | ரம்புக்கனை | 89 |
| 5. | மாவனல்லை | 71 |
| 6. | அரநாயக | 61 |
| 7. | எட்டியாந்தோட்டை | 32 |
| 8. | தரணியலை | 26 |
| 9. | ருவன்வல்லை | 38 |
| 10. | தெஹிஓவிட | 39 |
| 11. | புலத்கொஹுபிடிய | 27 |
| | மொத்தம் | 573 |

## புவியியல் அமைவிடம்

கேகாலை மாவட்டம் நெட்டாங்கு 6.50 - 7.20 மற்றும் அகலாங்கு 80.10 - 80.35 இற்கிடையில் அமைந்துள்ளது. வடக்கில் குருநாகல் மாவட்டத்தையும்,தெற்கில் இரத்தினபுரி மாவட்டத்தையும், கிழக்கில் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களையும் மேற்கில் கம்பஹ மற்றும் கொழும்பு மாவட்டங்களையும் எல்லைகளாக்க கொண்டுள்ளது. வடக்கு தெற்கிற்கிடையில் 48 கி.மீ. தூரத்தையும் கிழக்கு மேற்கிற்கிடையில் 32 கி.மீற்றர் தூரத்தையும் கொண்ட இப்பிரதேசம் 1692.8 சதுர கி.மீற்றர் (643 சதுர மைல்கள்) பரப்பளவைக் கொண்டுள்ளது.



Administrative Boundaries- Kegalle District
N
To Kurunegala
To Polgahawela
From Colombo
To Kandy
Gampola
To Hatton
To Avissawella
To Ehaliyagoda
Rambukkana
Kegalle
Karandupona
Mawanella
Galigamuwa
Nelundeniya
Warakapola
Galapitamada
Aranayaka
Bulathkohupitiya
Ruwanwella
Yatiyantota
Dehiowita
Deraniyagala
Legend
Aranayaka
Bulathkohupitiya
Dehiovita
Deraniyagala
Galigamuwa
Kegalle
Mawanella
Rambukkana
Ruwanwella
Warakapola
Yatiyanthota
Prepared by District Land use Planning office Kegalle

## மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம்

இலங்கை வரலாற்றில் அரசியல்,பொருளாதார,சமூக, மத மற்றும் கலாச்சாரத் தகவல்களை உற்றுநோக்கும்போது கேகாலை மாவட்டம் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களிற்கு அடுத்த்தாக்க் கானப்படுகின்றது."ப்ராக்" வரலாற்று யுகம் முதல் தற்காலம் வரையில் அனைத்து யுகங்களிற்கும் உரித்தான வரலாற்றுடன் பினைந்து கானப்படுகின்றது. அனைத்து யுகங்களிற்கும் உரித்தான தொல்பொருளியல் மற்றும் வரலாற்றுப் பெறுமதியுடன் கூடிய இடங்கள்,சிதைவுகள் மற்றும் பல்வேறு வகையான கலை ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இந்த நாட்டிற்கு பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் இரண்டாம் பேதிஸ் மன்னர் காலத்திற்கு சமகாலத்தில் தம்பதிவவில் இருந்த தர்மாஷோக மன்னரின் பிராக்மிய எழுத்துக்கள் கொண்ட கடிதங்களுடன் சார்ந்த பிராக்மிய எழுத்துக்களால் எழுதப்பட்ட பல "லென்" ஆவனங்கள் பல இலங்கையின் பல பகுதிகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இவ்வாரான பிராக்மி ஆவணங்கள் கேகாலை மாவட்டத்தில் அம்பலகந்தைக்கு அருகில் போடாபே,அலுலென,அம்பேபுஸ்ஸ,சல்கல,லெனகல தனகிரிகல,யடஹலென,ஹீனடிகல,பதவிகம்பல போன்ற பல்வேறுபட்ட இடங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.மாவட்டம் முழுவதும் பல்வேறுபட்ட விடயங்கள் சம்பந்தமான பல "செல்லிபிகளும்" கிடைத்துள்ளன.உதாரணமாக தெவனகல இல.01செல்லிபி,தெதிகம அபயதான செல்லிபி என்பவைகளைக் குறிப்பிடலாம்.

"பாஷான" யுக மக்கள் வசித்திருக்கலாம் என்பதற்கு சான்றாக பழமைவாய்ந்த பல கற்குகைகளை கேகாலை மாவட்டத்தில் கானக்கூடியதாக இருக்கின்றது. தொரவக அலுலென,அஸ்மடல,பதவிகம்பல,பதலேகல,லெனகல,அம்பலகந்த,ஹெலமட,ஹிடிபன,உதுவன்கந்த,பெலிகல,செலவ, யடஹாலென,சல்கல,கெலேதம்புல்ல,கி.மு.20,000 - 30,000 இடையிலான ஷீலா யுகத்திற்கு உரித்தான கல்வெட்டுக்கள்,பானை சட்டிகள்,எழும்புக் கூடுகள் தொரவக அகழ்வுகளிளிருந்து கிடைத்துள்ளன.ரம்புக்கனை பதவிகம்பொல "டங்கித மஞ்சகய"எனும் கல் அறையில் இருக்கின்ற பாரிய இரண்டு கற்பலகைகள் மற்றும் கல் ஆயுதங்கள் கி.வ.4000 - 5000 யுகத்திற்கு உரித்தானவை என கருதப்படுகின்றது.ஆகவே "பாஷான" யுகத்தின் ஆரம்பத்திலேயே மணித சஞ்சாரம் இருந்ததாக உறிதிப்படுத்தப்படுத்தப்படுகின்றது. மாவனல்லைக்கு அருகில் உள்ள அஸ்மடலவிலிருந்து மணித எழும்புகள் சில கானப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது, அஸ்மடல இஹலகந்த கற்குகையில் தொரவக கற்குகைபோன்று பறவைகளின் சித்திரங்கள்,தர்மச்சக்கரம் மற்றும் மிருக உருவங்கள் கானப்படுவதால் மிக ஆதிகால மணிதன் கேகாலை மாவட்டத்தில் வாழ்ந்ததாக சான்றுகள் கூறுகின்றன.

பௌத்த மதம் இந்நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட கி.மு.3 ஆம் நூற்றாண்டு மற்றும் அதற்குப் பின் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல பௌத்த நினைவுச் சின்னங்கள் இப்பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சங்கமித்தா கன்னியாஸ்திரியின் தூபம் ஒவ்வொரு "யொதுனை" க்குமிடையில் நடப்பட்டள்ளதாக தீபவங்ஷ மற்றும் மஹாவங்ஷவில் கானப்படுகின்றது. தெலிவல கொடவெஹெர அவ்வாரான ஒரு தூபமாகும். இலங்கையின் இறுதி "மஹரதனன் வஹன்சே" என பிரசித்தி பெற்ற மலியதேவ "மஹரதுன் வஹன்சே" அவர்களின் அங்கங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக கருதப்படுகின்ற வட்டாரம மஹ விகாரையும் இங்கு அமைந்துள்ளது. கரண்டுபொன அலுலென கேகாலை வரலாற்றிற்கு முக்கிய ஒளியூட்டுகின்ற இன்னுமொரு நினைவுச் சின்னமாகும். கேகாலைக்கு மாத்திரமன்றி இலங்கை வரலாற்றிற்கே ஒளியூட்டுகின்ற இன்னுமொரு நினைவுச் சின்னம் தெவனகலையாகும். இவ்வாறு வரலாற்றுப் பின்ன்னியுடன் கூடிய சில இடங்களை இவ்வாறு குறிப்பிடலாம்.1887 இல் நிர்மானிக்கப்பட்ட ஜுபிலி அம்பலம,200 ஏக்கர்களுக்கு வியாபித்துள்ள குருலுகெலே சரனாலயம் மற்றும் அங்கு கானப்படுகின்ற 150 வருடங்கள் பழமைவாய்ந்த "புஸ் வெல", இலங்கையின் மிகப்பெரிய மேல்வளைவு பாலம் மற்றும் ஆசியாவில் மிக நீளமான செங்கற் பாலமான மாவனல்லை செங்கல் மற்றும் மேல்வளைவு பாலம்,கிருவா அம்பலம, சரதியல்கல், அலுத்நுவர ஸ்ரீ தடிமுண்ட தேவாலயம்,பெலிகம்மன பொத்குல் விகாரை, பதவிகம்பளை கல்மெஸ்ஸ, தெலிவலை கொடவெஹெர தெதிகம கொடவெஹெர,சீதாவக பெரெண்டி கோயில் என்பனவாகும். இவ்வாறு நோக்கும் போது வரலாற்று சான்றுகள் பல நிறைந்த மாவட்டமொன்றாக கேகாலை மாவட்டத்தை அறிமுகப்படுத்தலாம்.

## இயற்கை வளங்கள்

இலங்கையின் சிறந்த காரீய சுரங்கம் கேகாலை மாவட்ட போகலயில் அமைந்துள்ளது

## பொதுமக்களின் வாழ்க்கைத் தொழில் முறை மற்றும் பிரதான வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள்

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறைமையொன்றை மாவட்டத்தில் கானக்கூடியதாக இருக்கின்றது.தேயிலை,கோபி,கொகோ,மிளகு,கராம்பு, சாதிக்காய் போன்ற ஏற்றுமதிப்பயிர்களின் பொருளாதாரம் முக்கிய பங்கு வகிக்கின்றன.மொத்த நிலப்பரப்பில் அதிகமான பகுதிகளில் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

## நீர்ப்பாசனம்

மாவட்டம் முழுவதும் நெற்செய்கை நடவடிக்கைகள் மழைநீரினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. முறையான நீர்ப்பாசனத் திட்டமொன்றை இம்மாவட்டத்தில் கானக்கூடியதாக இல்லை

## மழை நீர்

கேகாலை மாவட்டம் தென்மேற்கு உலர் வலயத்திற்கு உரித்தாவதுடன், அதிக மழைவீழ்ச்சி மற்றும் அதிக சூரிய ஒளி கிடைக்கின்ற ஒரு பிரதேசமாகும். வடகீழ்பருவப்பெயர்ச்சி, தென்மேல்பருவப்பெயர்ச்சி மூலம் மழை கிடைப்பதோடு வருடம் முழுவதும் மழை வீழ்ச்சியைக் கானக்கூடியதாக இருக்கின்றது. வருடாந்த மழை வீழ்ச்சி 2500 - 3000 மிமீற்றர் வரையிலாகும்.அதேபோன்று மத்திய மலைநாட்டின் காற்றின் திசை அமைந்துள்ளதனால் அதிக மழை வீழ்ச்சி கிடைப்பது தென்மேற்கு பருவப்பெயற்சிக் காலமாகிய மே - செப்டெம்பர் கால எல்லையிலாகும். அதன் அளவு மி.மீ.1500 - மி.மீ 2000 இற்கும் இடையிலாகும்.

## சனத்தொகை

2011 தேசிய புள்ளிவிபரவியல் அறிக்கைக்கேற்ப இலங்கையின் மொத்த சனத்தொகை 20,277,597 ஆவதுடன் கேகாலை மாவட்ட மொத்த சனத்தொகை 836,603 ஆகும். இது 4.01% ஆகும். இலங்கையின் சாதாரண வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் 2011 இல் 0.71% ஆகும். இது கேகாலை மாவட்டத்தில் 0.61% ஆகும். இலங்கையில் சனத்தொகை அதிகரிக்கும் விகிதம் 7.9% ஆவதுடன் இம்மாவட்டத்தினுல் இவ்விகிதம் 4.01% ஆகும்.

சனத்தொகையில் ஆண் பெண் விகிதத்தை பார்க்கும்போது 2011 ஆண்டு ஆகும்போது மாவட்ட சனத்தொகையில் அதிகமானோர் பெண்களாவதுடன் அதன் எண்ணிக்கை 436,199 ஆகும்.ஆண்களின் எண்ணிக்கை 388,633 ஆகும்.

மாவட்ட சனத்தொகைப் பரம்பலை நோக்கும்போது அதிகமானோர் வரகாபொலை மற்றும் மாவனல்லை பிரதேச செயலகப் பிரிவுகளிலாகும்.அங்கு வசிப்பவர்களின் எண்ணிக்கை 100,000 இனை விட அதிகமானதாகும். குறைந்த சனத்தொகைப் பரம்பல் கானப்படுவது புலத்கொஹுபிடிய மற்றும் தரணியகலை பிரதேச செயலகப் பிரிவுகளிலாகும். அங்கு வசிக்கின்ற மக்களின் எண்ணிக்கை 55,000 இனை விடக் குறைவானதாகும்.2011 ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் அறிக்கைகளுக்கேற்ப மாவட்டத்தில் 15 வயதிற்குக் குறைந்த தங்கி வாழ்வோரின் எண்ணிக்கை 204,250 ஆகும். அதேபோன்று வயது வந்த தங்கி வாழ்வோரின் எண்ணிக்கை 121,774 ஆகும். ஆகவே மொத்த தங்கி வாழ்வோர்களின் எண்ணிக்கை 326,024 ஆகும். உழைப்புப் படையினை பிரநிதித்துவப்படுத்துகின்றவர்களின் எண்ணிக்கை 468,868 ஆகும். மொத்த சனத்தொகையில் 24.76% ஆனோர் குறைந்த வயதையுடைய தங்கி வாழ்வோர் என்பதுடன் மேலும் 14.75% ஆனோர் வயதுவந்த தங்கி வாழ்வோர் ஆகும். மாவட்டத்தின் மொத்த உழைப்புப் படையினர் 60.47% ஆகும். சனத்தொகை நிபுனர்களின் கருத்துப்படி இது ஒரு சிறப்பான நிலைமையாகும்

## கேகாலை மாவட்ட சனத்தொகைத் தகவல்கள்

| விபரம் | 2001 சனத்தொகை | 2011 சனத்தொகை |
|---|---|---|
| **மொத்த சனத்தொகை** | 784,371 | 836,603 |
| **வருடாந்த அதிகரிப்பு வேகம்** | 0.71 | 0.61 |
| **சனத்தொகை அடர்த்தி** | 466 | 497 |
| **பால் விகிதம்** | 95.9 | 91.7 |
| **வயது எல்லை** | | |
| ❖ 0 - 14 வருடம் | 199,682 | 204,261 |
| ❖ 15 - 59 வருடம் | 498,301 | 510,595 |
| ❖ 60 வருடத்திற்கு மேல் | 86,388 | 121,747 |
| **இனம்** | | |
| ❖ சிங்களம் | 671,471 | 715,723 |
| ❖ இலங்கைத் தமிழர் | 14,246 | 20,250 |
| ❖ இந்தியத் தலைவர் | 45,916 | 41,468 |
| ❖ இலங்கை சோனகர் | 52,004 | 57,952 |
| ❖ பர்கர் | 210 | 577 |
| ❖ மலாய் | 189 | 168 |
| ❖ இலங்கை செட்டி | 56 | 37 |
| ❖ பாரதம் | 09 | 04 |
| ❖ ஏனையவை | 269 | 424 |
| **மத அடிப்படையில்** | | |
| ❖ பௌத்தம் | 664,388 | 707,830 |
| ❖ இந்து | 53,195 | 53,997 |
| ❖ இஸ்லாம் | 53,184 | 60,575 |
| ❖ ரோமன் கத்தோலிக்க | 8,941 | 8,221 |
| ❖ ஏனைய கிறிஸ்தவ | 4,513 | 5,865 |
| ❖ ஏனையவை | 150 | 115 |

## மாவட்டம் பற்றிய முக்கிய தகவல்கள்

| | | |
|---|---|---|
| மாவட்டத்தின் பெயர் | - | கேகாலை |
| மாகாணம் | - | சபரகமுவ |
| மொத்த நிலப் பரப்பு | - | 1692.8 ச.கி.மீ |
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | - | 11 |
| கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | - | 573 |
| ஆடகளின் எண்ணிக்கை | - | 746,685 |
| தேர்தல் பிரிவுகளின் எண்ணிக்கை | - | 09 |
| மாநகர சபைகளின் எண்ணிக்கை | - | இல்லை |
| நகர சபைகளின் எண்ணிக்கை | - | 01 |
| பிரதேச சபைகளின் எண்ணிக்கை | - | 11 |
| அமைச்சு மற்றும் மாவட்ட செயலகத்தின் | | |
| கீழ் இருக்கின்ற சுற்றுலா விடுமுறை விடுதிகள் | - | இல்லை |
| உத்தியோகபூர்வ விடுதிகள் | - | 32 |
| வலயக் கல்வி அலுவலர்களின் எண்ணிக்கை | - | 238 |
| பாடசாலைகளின் எண்ணிக்கை | - | 538 |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | - | 11,078 |
| பாராளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை | - | 09 |
| மாகாண சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை | - | 19 |
| உள்ளூராட்சி அமைப்புக்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை | - | 195 |
| மொத்த சனத்தொகை | - | 836,603 |
| வாக்காளர்களின் எண்ணிக்கை | - | 649,878 |

## கேகாலை மாவட்ட செயலக அமைப்பு வரைபடம்



## 2014.12.31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

2014 ஆம் வருடத்தில் மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகம் 11 இன் பதவியனியினர் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.

| வகை | முகாமைத்துவ உதவியாளர் சேவை சுற்றுநிருபத்திற்கேற்ப ஊழியர்களின் எண்ணிக்கை | தற்போது கடமையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 42 | 37 | 05 |
| மூன்றாம் நிலை | 30 | 22 | 08 |
| இரண்டாம் நிலை | 1,037 | 1,005 | 32 |
| ஆரம்ப நிலை | 115 | 109 | 06 |
| **மொத்தம்** | 1,224 | 1,173 | 51 |

## 2014 செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - மாவட்ட செயலகம் - கேகாலை

| விடயங்கள் | விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர் | மேற்பார்வை | ஆரம்பித்த திகதி | கடைசித் திகதி | காலம்/மாதம் | செலவு ரூபா மில் |
|---|---|---|---|---|---|---|
| 1. பிரதேச நிறுவாகத்தினூடாக நியதிச்சட்ட விடயங்களை செயற்படுத்தல் | பிரதேச செயலாளர் | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் | 2014.01.01 | 2014.12..31 | 12 | 518.02 |
| **2. அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துதல்** | | | | | | |
| i. பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டம் | பிரதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் (திட்டமிடல்) | 2014.01.01 | 2014.12.31 | 12 | 52.36 |
| ii. ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை | பிரதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் (திட்டமிடல்) | 2014.01.01 | 2014.12.31 | 12 | 570.54 |
| iii. கிராமிய பாடசாலை அபிவிருத்தி | பிரதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் (திட்டமிடல்) | 2014.01.01 | 2014.12.31 | 12 | 49.85 |
| iv. கம நெகும விஷேட | பிரதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் (திட்டமிடல்) | 2014.01.01 | 2014.12.31 | 12 | 282.75 |
| v. மக்கள் பிரதிநிதிகள் கருத்திட்டங்கள் | பிரதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் (திட்டமிடல்) | 2014.01.01 | 2014.12.31 | 12 | 174.51 |
| vi. மாகாண எழுச்சி | பிரதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் (திட்டமிடல்) | 2014.01.01 | 2014.12.31 | 12 | 611.65 |
| vii. பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | பிரதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் (திட்டமிடல்) | 2014.01.01 | 2014.12.31 | 12 | 60.95 |
| viii.தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டம் | பிரதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் (திட்டமிடல்) | 2014.01.01 | 2014.12.31 | 12 | 2,601.83 |
| ix..வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் | பிரதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் (திட்டமிடல்) | 2014.01.01 | 2014.12.31 | 12 | 23.98 |
| 3. சமூர்த்தி நிதியம் மூலம் மணித வள/பௌதீக அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துதல் | பிரதேச செயலாளர் உதவி சமூர். | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் பிரதேச செயலாளர் | 2014.01.01 | 2014.12..31 | 12 | 1,345.68 |
| 4. நிருவாக விடயங்களுக்காக மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல். | பிரதான கணக்காளர் | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் | 2014.01.01 | 2014.12..31 | 12 | 69.95 |
| 5. சமூக நலன்புரி விடயங்களை செயற்படுத்தல்<br>i. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு | மேலதிக அரசாங்க அதிபர் | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் | 2014.01.01 | 2014.12..31 | 12 | 2.94 |
| 6 ஏனைய திணைக்களங்கலும் அரச நிறுவனங்கலும்<br>i. நிதிக் கட்டுப்பாடு ( வரவு செலவு ) | பிரதான கணக்காளர் | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் | 2014.01.01 | 2014.12.31 | | நிருவாக செலவினங்கள் மாவட்ட நிருவாகத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது |
| ii. ஒருங்கினைப்பு மற்றும் நிருவாக நடவடிக்கைகள் | பகுதிப் பொருப்பாளர்கள் | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் | 2014.01.01 | 2014.12.31 | | |
| 7. மாவட்ட நிருவாகம் | பகுதிப் பொருப்பாளர்கள் | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் | 2014.01.01 | 2014.12.31 | 12 | 53.12 |

**2014 ஆம் வருடத்தினுல் இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வுகள் சம்பந்தமான சுறுக்க அறிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது**

<table>
<tr><th>தொடர் இலக்கம்</th><th>கணக்காய்வுக்குற்படுத் தப்பட்ட பிரதேச செயலகங்கள்</th><th>கொடுப்பனவு வவுச்சர்களின் கால எல்லைகளின் சுறுக்கம்</th><th>விடயப் பரப்பு</th></tr>
<tr><td>01</td><td>தெஹிஓவிட்ட</td><td>2013 மே முதல் 2014 மார்ச் வரை</td><td rowspan="11">I. சிறாப்பரின் பொறுப்பிலிருக்கின்ற நிதிப்பரிசீலனை<br>II. செலவினச் சான்றுபத்திரங்களைப் பரிசீலித்தல்<br>III. களஞ்சியசாலை / கையிருப்பு ஏடுகளைப் பரிசீலித்தல்<br>IV. வங்கிக் கணக்கினக்கக் கூற்று/ காசேடு / வாக்குப் பதிவேடு உற்பட கணக்கேடுகளைப் பரிசீலித்தல்<br>V. வரவு / விடுமுறைகளைப் பரிசீலித்தல்<br>VI. தனி நபர் கோவைகளைப் பரிசீலித்தல்<br>VII. கடன் கோவைகளைப் பரிசீலித்தல்<br>VIII. அபிவிருத்தித் திட்டங்ளின் கோவைகளைப் பரிசீலித்தல்<br>IX. புகையிரத பற்றுச் சீட்டுக்களை வழங்குதல் மற்றும் செவனங்களைப் பரிசீலித்தல்<br>X. முதியோர் படிக் கொடுப்பனவுகளைப் பரிசீலித்தல்<br>XI. பதிவாளர் பிரிவில் விவாக, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் வழங்குதலைப் பரிசீலித்தல்<br>XII. வாகணப் பராமரிப்பு,எரிபொருள், மற்றும் லொக் புத்தகங்களைப் பரிசீலித்தல்</td></tr>
<tr><td>02</td><td>எட்டியாந்தோட்டை</td><td>2013 ஆகஸ்ட் முதல் 2014 ஜூலை வரை</td></tr>
<tr><td>03</td><td>ரம்புக்கனை</td><td>2013 ஜூலை முதல் 2014 மார்ச் வரை</td></tr>
<tr><td>04</td><td>அரனாயக</td><td>2013 ஜனவரி முதல் 2014 ஜனவரி வரை</td></tr>
<tr><td>05.</td><td>தரணியகலை</td><td>2013 ஒக்டோபர் முதல் 2014 செப்டெம்பர் வரை</td></tr>
<tr><td>06.</td><td>கலிகமுவ</td><td>2013 ஒக்டோபர் முதல் 2014 ஒக்டோபர் வரை</td></tr>
<tr><td>07.</td><td>கேகாலை</td><td>2013 ஒக்டோபர் முதல் 2014 ஒக்டோபர் வரை</td></tr>
<tr><td>08.</td><td>மாவனல்லை</td><td>2013 ஜனவரி முதல் 2014 பெப்ரவரி வரை</td></tr>
<tr><td>09.</td><td>ருவன்வல்லை</td><td>2013 ஆகஸ்ட் முதல் 2014 ஜூலை வரை</td></tr>
<tr><td>10.</td><td>வரகாபொல</td><td>2013 மே முதல் 2014 ஜூலை வரை</td></tr>
<tr><td>11.</td><td>புலத்கொஹுபிட்டிய</td><td>2013 செப்டெம்பர் முதல் 2014 ஜூலை வரை</td></tr>
<tr><td>12</td><td>மாவட்ட செயலகம்</td><td>2013 நவம்பர் 2014 செப்டெம்பர் வரை</td><td>கொடுப்பனவு வவுச்சர் பரிசீலனை</td></tr>
</table>

## வறுமானங்களை சேகரித்தல்

மாவட்டத்தின் வறுமானங்களை சேகரிக்கும் முகவர் நிறுவனமாக மாவட்ட செயலகம் செயற்படுகின்றது. இவ்விடயத்திற்காக 11 பிரதேச செயலகங்களும் உதவுகின்றன.

| இல. | வறுமானக் குறியீடு | வறுமான விபரம் | 2013 சேர்க்கப்பட்ட நிதி | 2014 சேர்க்கப்பட்ட நிதி |
|---|---|---|---|---|
| 1 | 10-03-07-02 | பதிவாளர் நாயகத் திணைக்கள பதிவுக் கட்டனம் | 20,244,585.49 | 17,875,550.00 |
| 2 | 10-03-07-03 | தனியார் மரப் போக்குவரத்து | 1,643,423.27 | 1,393,291.00 |
| 3 | 10-03-07-99 | பிற | 6,652,798.68 | 8,012,575.61 |
| 4 | 10-03-07-05 | மக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டனம் | 238,000.00 | 210,350.00 |
| 5 | 20-02-01-01 | அரசாங்க கட்டடங்கள் வீடமைப்பு மீதான வாடகை | 1,102,844.03 | 1,129,234.80 |
| 6 | 20-02-02-99 | பிற | 5,225,276.88 | 5,823,237.50 |
| 7 | 20-03-02-07 | கடவுச் சீட்டு அனுமதிப் பத்திரக் கட்டனங்கள் | 162,500.00 | -- |
| 8 | 20-03-02-13 | பரீட்சை மற்றும் பிற கட்டனங்கள் | 1,769,800.00 | 5,244,700.00 |
| 9 | 20-03-02-14 | மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டனங்கள் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் | 40,768,575.00 | 43,975,377.60 |
| 10 | 20-03-02-99 | நானவித | 780,937.27 | 16,619,242.23 |
| 11 | 20-03-03-00 | தண்டப் பணம் மற்றும் அரச உடமையாக்குதல் | 567,201.16 | 447,793.18 |
| 12 | 20-03-99-00 | ஏனைய கிடைப்பனவுகள் | 6,404,542.89 | 39,648,324.86 |
| 13 | 20-04-01-00 | சமூகப் பாதுகாப்பு கட்டனங்கள் | 30,153,827.56 | 27,865,274.61 |
| 14 | 20-06-02-00 | நிலையான சொத்துக்கள் விற்பைணை | 8,638.00 | 12,835.00 |
| | | ஒன்று சேர்க்கப்பட்ட மொத்த வறுமானம் | 115,723,650.23 | 168,257,786.39 |

வகை - வருமானக் கணக்கு

| விபரம். | நிதிச் செயலாற்றுகை | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா . '000 | | | | |
| | சம்பந்தப்பட்ட வருடம் | | முன்னைய வருடத்தில் | மாறுதல்கள் | |
| | உரிய | உண்மையான | உண்மையான | உரிய | முன்னைய வருடத்தில் உண்மையான |
| வருமானக் குறியீடு | | | | | |
| 10-03-07-02 | - | 17,876 | 20,244 | | (2,368) |
| 10-03-07-03 | - | 1,393 | 1,643 | | (250) |
| 10-03-07-99 | 7,000 | 8,013 | 6,652 | | 1,361 |
| 10-03-07-05 | 250 | 210 | 238 | | (28) |
| 20-02-01-01 | 1,148 | 1,129 | 1,103 | | 26 |
| 20-02-02-99 | 5,706 | 5,823 | 5,225 | | 598 |
| 20-03-02-07 | - | - | 163 | | (163) |
| 20-03-02-13 | - | 5,245 | 1,770 | | 3,475 |
| 20-03-02-14 | - | 43,975 | 40,769 | | 3,206 |
| 20-03-02-99 | 757 | 16,619 | 781 | | 15,838 |
| 20-03-03-00 | 761 | 448 | 567 | | (119) |
| 20-03-99-00 | 3,933 | 39,648 | 6,405 | | 33,243 |
| 20-04-01-00 | - | 27,865 | 30,154 | | (2,289) |
| 20-06-02-00 | 15 | 13 | 9 | | 4 |
| மொத்தம். | | 168,257 | 115,723 | | |

## <u>மணித வள அபிவிருத்தி</u>

## <u>தொழில் வழிகாட்டல் சேவைகள் கிளையின் நடவடிக்கைகள்</u>

மாவட்டத்தின் மணித வள அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக இப்பிரிவின் பங்களிப்பு மிக உயர் மட்டத்தில் கானப்படுகின்றது,தொழில் வழிகாட்டல் அலுவலர் உற்பட ஒரு திட்ட அலுவலர் மற்றும் மணித வள அபிவிருத்தி உதவியாளர்கள் 08 பேர்கள் இப்பிரிவில் பணியாற்றுகின்றனர். இது 04 பிரிவுகளாகச் செயற்படுகின்றன.

1. தொழில் வழிகாட்டல் பிரிவு
2. தொழில் உருவாக்கல் சேவைகள் நிலையம்
3. நிதிக் கடன் நிகழ்ச்சித்திட்டம்
4. உற்பத்தித் திறன் மேம்படுத்தல் நடவடிக்கைகள்

இப்பிரிவின் மூலம் 2014 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வருடாந்த முன்னேற்றச் சுருக்கம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**தொழில் வழிகாட்டல்**

| அறிவூட்டல் | நிகழ்ச்சிகள் | நன்மைபெற்றோர் | செலவினம் |
|---|---|---|---|
| • பாடசாலை மாணவர்கள் (சா/த மற்றும் உ/த) | 159 | 4,687 | ---- |
| • தொழில் தேடுவோர் | 12 | 373 | 139,934.00 |
| • தொழில் முயற்சியாளர்கள் | 14 | 439 | 177,500.00 |

**தொழல்களுகாக ஈடுபடுத்தல்**

| | |
|---|---|
| • பதிவுசெய்தல் | 2,387 |
| • தொழில் வெற்றிடங்களைப் பெற்றுக்கொள்ளல் | 1,800 |
| • நேர் முகப் பரீட்சைக்குத் தோற்றுவித்தல் | 2,040 |
| • தொழில்களுக்கு ஈடுபடுத்தல் | 480 |

3. நிதிக் கடன் நிகழ்ச்சித்திட்டம்

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கியுடன் இனைந்து கடன் வழங்குதல் | கடன் பெற்றோர் | 341 |
| | கடன் நிதி அளவு | 15,260,000.00 |

**உற்பத்தித்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள்**

உற்பத்தித் திறன் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தல்

| | |
|---|---|
| • முன் பள்ளிகள் | 96 |
| • பாடசாலைகள் | 110 |
| • அரச நிறுவனங்கள் | 62 |
| • சனசமூக நிறுவனங்கள் | 82 |
| • தனியார் நிறுவனங்கள் | 08 |

# தேர்தல் நடவடிக்கைகள்

கேகாலை மாவட்டத்தில் 09 தேர்தல் பிரிவுகள் கானப்படுகின்றன.இங்கு 01 பட்டின சபை மற்றும் 11 பிரதேச சபைகள் கானப்படுகின்றன. வாக்காளர் இடாப்பினை நாளது வரைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட அனைத்துக் கடமைகளுக்கும் மேலதிகமாக 2013 ஆம் வருடத்தில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்திற்கு முன்னோடியாக காணி உறுதிகளை வழங்குதல் சம்பந்தமாக வதிவினை அத்தாட்சிப்படுத்துவதற்காக வாக்காயர் இடாப்பின் பிரித்தெடுப்புக்கள் அதிக எண்ணிக்கையில் வினியோகிக்கப்பட்டன.

| தேர்தல் மாவட்டம் | எழுத்து |
|---|---|
| தெதிகம | அ |
| கலகமுவ | ஆ |
| கேகாலை | இ |
| ரம்புக்கனை | ஈ |
| மாவனல்லை | உ |
| அரனாயக | ஊ |
| எட்டியாந்தோட்டை | எ |
| ருவன்வல்லை | ஏ |
| தரணியகலை | ஏ |

**நகர சபை**

1. கேகாலை

**பிரதேச சபைகள்**

1. கேகாலை
2. கலிகமுவ
3. வரகாபொல
4. ரம்புக்கனை
5. மாவனல்லை
6. அரநாயக
7. எட்டியாந்தோட்டை
8. தரணியகலை
9. ருவன்வல்லை
10. தெஹிஓவிட
11. புலத்கொஹுபிடிய

## ஊடக மற்றும் செய்திப்பிரிவு

மாவட்ட செய்திப்பிரிவு ஊடக அலுவலர் மற்றும் திட்ட அமுலாக்கல் உதவி அலுவலர் மற்றும் விசாரணை அலுவலர் ஒருவரையும் தன்னகத்தே கொண்டது. 2013 ஆம் வருடத்தில் ஊடகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

1. ஊடக பயிற்சி நிகழ்வுகளை நடாத்துதல் - 04
2. ஊடக அறிவித்தல்களை வழங்குதல் - 187
3. அரச உத்தியோகபூர்வ இணையத்திற்கு செய்திகளை வழங்குதல் - 132
4. ஊடக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் - 52

## இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்

இடர் முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்படுகின்ற மாவட்ட இடர் முகாமைத்துவ அலகு மற்றும் தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலையத்தினூடாக மாவட்டத்தில் இடர் நிலைமைகளைக் குறைத்துக் கொள்ள பெரு முயற்சி எடுக்கப்படுகின்றது. மாவட்ட இடர் முகாமைத்துவ அலகு ஒரு உதவிப் பணிப்பாளர் மற்றும் உதவி ஒருங்கிணைப்பு அலுவலரைக் கொண்டுள்ளது. மாவட்ட இடர்' நிவாரண சேவைகள் நிலையம் அபிவிருத்தி உதவியாளர் ஒருவரைக் கொண்டுள்ளது,

**2013/2014 ஆண்டுகளில் மாவட்டத்தில் அரை சேதங்கள் பற்றிய தகவல்கள்**

| | 2013 ஆம் ஆம் வருடம் | | | | | | | 2014 ஆம் ஆம் வருடம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலுவலகம் | வெள்ளம் | மண் சரவு | வெள/மண் சரிவு | கடும் மழை | சிறு மண் சரிவு | சூறாவளி | ஏனையவை | வெள்ளம் | மண் சரவு | வெள/மண் சரிவு/ மரம் விழுதல் | கடும் மழை | சிறு மண் சரிவு | சூறாவளி | ஏனையவை |
| தெஹிஓவிட | -- | -- | -- | 01 | -- | 03 | -- | -- | -- | 04 | 02 | 01 | 05 | -- |
| எட்டியாந்தோட்டை | | | | | 01 | | | -- | -- | 40 | 02 | 10 | 15 | 03 |
| ரம்புக்கனை | -- | -- | -- | -- | -- | -- | -- | 21 | 06 | 04 | 03 | 08 | -- | -- |
| அரனாயக | -- | -- | 01 | -- | -- | -- | -- | -- | -- | 09 | 03 | 06 | -- | 03 |
| தரணியகலை | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 04 | -- | -- |
| கலிகமுவ | -- | -- | 04 | -- | -- | -- | -- | 04 | -- | 02 | 04 | -- | -- | -- |
| கேகாலை | -- | -- | 02 | -- | -- | -- | -- | -- | -- | 16 | 05 | 03 | 10 | 04 |
| மாவனல்லை | -- | -- | -- | -- | -- | -- | -- | 22 | -- | 08 | 05 | 05 | 20 | -- |
| ருவன்வல்லை | -- | -- | 01 | -- | -- | -- | -- | -- | -- | 02 | -- | 03 | -- | 02 |
| வரகாபொல | -- | -- | 02 | -- | -- | -- | -- | 12 | -- | 04 | -- | 04 | -- | 02 |
| புலத்கொஹுபிடிய | -- | -- | -- | -- | -- | -- | -- | | | -- | -- | -- | -- | -- |
| மொத்தம் | -- | -- | 10 | 01 | 01 | 03 | -- | 59 | 06 | 89 | 24 | 44 | 50 | 14 |

**2013/2014 ஆண்டுகளில் மாவட்டத்தில் அரை சேதக் கொடுப்பனவுகள் பற்றிய தகவல்கள்**

‘000

| | 2013 ஆம் ஆம் வருடம் | | | | | | | 2014 ஆம் ஆம் வருடம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலுவலகம் | வெள்ளம் | மண் சரவு | வெள/மண் சரிவு | கடும் மழை | சிறு மண் சரிவு | சூறாவளி | ஏனையவை | வெள்ளம் | மண் சரவு | வெள/மண் சரிவு/ மரம் விழுதல் | கடும் மழை | சிறு மண் சரிவு | சூறாவளி | ஏனையவை |
| தெஹிஓவிட | -- | 0.10 | -- | 0.30 | -- | -- | -- | -- | -- | 0.06 | 0.03 | 0.02 | 0.08 | -- |
| எட்டியாந்தோட்டை | | | 0.10 | | | | | -- | -- | 0.36 | 0.18 | 0.09 | 0.14 | 0.03 |
| ரம்புக்கனை | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| அரனாயக | -- | 0.05 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| தரணியகலை | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| கலிகமுவ | | 0.17 | | | | | | -- | -- | -- | -- | -- | -- | -- |
| கேகாலை | -- | 0.20 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| மாவனல்லை | -- | -- | -- | -- | -- | -- | -- | 0.15 | -- | 0.06 | 0.04 | 0.04 | 0.14 | |
| ருவன்வல்லை | -- | 0.10 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| வரகாபொல | | 0.20 | | | | | | -- | -- | -- | -- | -- | -- | -- |
| புலத்கொஹுபிடிய | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| மொத்தம் | -- | 0.72 | 0.10 | 0.30 | -- | -- | -- | 0.15 | -- | 0.48 | 0.09 | 0.15 | 0.36 | 0.03 |

**2013/2014 ஆண்டுகளில் மாவட்டத்தில் முழுச்சேதங்களுக்கான கொடுப்பனவுகள் பற்றிய தகவல்கள்**

| | 2013 ஆம் ஆம் வருடம் | | | | | | | 2014 ஆம் ஆம் வருடம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலுவலகம் | வெள்ளம் | மண் சரவு | வெள/மண் சரிவு | கடும் மழை | சிறு மண் சரிவு | சூறாவளி | ஏனையவை | வெள்ளம் | மண் சரவு | வெள/மண் சரிவு/ மரம் விழுதல் | கடும் மழை | சிறு மண் சரிவு | சூறாவளி | ஏனையவை |
| தெஹிஓவிட | -- | -- | -- | 03 | -- | 29 | -- | -- | -- | 02 | -- | -- | -- | -- |
| எட்டியாந்தோட்டை | | | | 51 | | | 04 | | | 03 | 01 | 02 | | |
| ரம்புக்கனை | -- | -- | -- | 03 | -- | 08 | -- | 12 | -- | 08 | 03 | 06 | -- | -- |
| அரனாயக | -- | -- | 02 | -- | -- | -- | -- | -- | -- | 01 | -- | 02 | -- | -- |
| தரணியகலை | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 28 | 01 | -- | -- | -- | -- |
| கலிகமுவ | -- | -- | -- | 01 | -- | -- | 01 | 03 | -- | 02 | -- | 02 | -- | -- |
| கேகாலை | | | 11 | | | | | -- | 02 | 03 | 02 | 03 | -- | -- |
| மாவனல்லை | -- | -- | -- | -- | -- | -- | -- | 03 | -- | 12 | -- | 05 | -- | 02 |
| ருவன்வல்லை | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 01 | -- | -- | -- | -- |
| வரகாபொல | -- | -- | 05 | 03 | 01 | -- | 01 | 02 | -- | .03 | 01 | 02 | -- | -- |
| புலத்கொஹுபிடிய | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| மொத்தம் | -- | -- | 18 | 61 | 01 | 37 | 06 | 20 | 30 | 36 | 07 | 22 | -- | 02 |

**2013/2014 ஆண்டுகளில் மாவட்டத்தில் முழுச்சேதங்களுக்கான கொடுப்பனவுகள் பற்றிய தகவல்கள்**

‘000

| | 2013 ஆம் ஆம் வருடம் | | | | | | | 2014 ஆம் ஆம் வருடம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலுவலகம் | வெள்ளம் | மண் சரவு | வெள/மண் சரிவு | கடும் மழை | சிறு மண் சரிவு | சூறாவளி | ஏனையவை | வெள்ளம் | மண் சரவு | வெள/மண் சரிவு/ மரம் விழுதல் | கடும் மழை | சிறு மண் சரிவு | சூறாவளி | ஏனையவை |
| தெஹிஓவிட | -- | -- | -- | 0.06 | -- | 0.53 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| எட்டியாந்தோட்டை | | | | 1.03 | | | 0.06 | -- | -- | -- | -- | -- | -- | -- |
| ரம்புக்கனை | -- | -- | -- | 0.085 | -- | -- | 0.29 | -- | -- | -- | -- | -- | -- | -- |
| அரனாயக | -- | -- | 0.02 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| தரணியகலை | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| கலிகமுவ | -- | -- | 0.10 | -- | -- | -- | 0.06 | -- | -- | -- | -- | -- | -- | -- |
| கேகாலை | | | 0.25 | | | | | -- | -- | -- | -- | -- | -- | -- |
| மாவனல்லை | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| ருவன்வல்லை | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| வரகாபொல | -- | -- | 0.166 | 0.06 | 0.01 | -- | 0.05 | -- | -- | -- | -- | -- | -- | -- |
| புலத்கொஹுபிடிய | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| மொத்தம் | -- | -- | 0.405 | 1.24 | 0.01 | 0.53 | 0.18 | -- | -- | -- | -- | -- | -- | -- |

2013 ஆம் வருடத்துடன் ஒப்பீட்டு ரீதியாக நோக்கும்போது 2014 ஆம் வருடத்தில் சிறு சேதங்கள் மற்றும் பெரும் சேதங்கள் குறைந்து செல்லும் தன்மையைக் கானக்கூடியதாக இருக்கின்றது. அதற்கான காரணம் 2014 ஆம் வருடத்தில் மாவட்டத்திற்கு கூடிய மழை வீழ்ச்சி கிடைத்ததும் மற்றும் இரண்டு முறைகள் மினி சூறாவளிகள் மூலம் ஏற்பட்ட தாக்கங்களுமாகும்.

**காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலக நடவடிக்கைகள்**

**பதவியணித் தொகுப்பு**

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| 1.காணிப் பதிவாளர் | 01 |
| 2. மேலதிக காணிப் பதிவாளர் | 05 |
| 3.அபிவிருத்தி அலுவலர் | 02 |
| 4.முகாமைத்துவ உதவியாளர் | 13 |
| 5.ஆவண உதவியாளர் | 05 |
| 6.அலுவலகப் பணியாளர் | 07 |
| 7.புத்தகம் கட்டுனர் | 01 |

2014 ஆம் வருடத்தில் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆட்கள் மற்றும் காணிப் பதிவு நடவடிக்கைகள் பின்வருமாறு.

1. பதிவிற்காகக் கிடைத்த காணி உறுதிகளின் எண்ணிக்கை 36,288

2. இரண்டாம் பிரதிகளுக்காகக் கிடைத்த காணி உறுதிகளின் எண்ணிக்கை 28,306

